பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

New Master Institute
B.M.C Lane, Jaffna
A/L - 90
பிரிவு II
நடைபெறுகிறது.

# உதயன்

விலை ரூ 2/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

New Master Institute
B. M. C. Lane Jaffna.
A/L 90
பிரிவு II
9.30 — Pure } Maths
10.30 — App. } Maths
9.30 — Zoology
10.30 — Botany
11.30 — Chemistry
12.30 — Physics

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆடி ௳ 26 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 26 (10-08-1988) UTHAYAN - A lively Tamil Daily கதிர்: 153

யாழ்ப்பாணத்திலிருந்து

## திருமலை சென்ற பஸ் கடத்தப்பட்டதா?

வவுனியா, ஆக 10

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வந்து திருகோணமலை நோக்கிச் சென்ற தனியார் பஸ் ஒன்று வவுனியா-ஹொரவப்பத்தானை வீதி 6ஆம் கட்டைப் பகுதியில் பயணிகளுடன் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பஸ்ஸில் அறுபதுக்கும் மேற்பட்ட பயணிகள் இருந்ததாகவும் வழிமறித்த கோஷ்டி ஒன்று பயணிகளைக் காட்டினுள் இட்டுச் சென்றதாகவும் தெரிகின்றது.

பின்னால் சென்ற இ.போ.ச. பஸ் விஷயமறிந்து வவுனியாவுக்குத் திரும்பியதுடன் பொலிசாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

திங்கட்கிழமை நண்பகலளவில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்தியப் படையினரும் பிற்பகலளவில் அவ்விடத்திற்கு விரைந்ததாகவும் பஸ்ஸுக்கும் பயணிகளுக்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது (அ-164)

## ரெலோ இயக்க அரசியல் பொறுப்பாளர் கொழும்பில் சுட்டுக்கொலை

ரெலோ இயக்கத்தின் வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கு. உதயன் கடந்த திங்கட்கிழமை இரவு கொழும்பில் வைத்து இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆமர் வீதியில் திங்கள் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றதாக இங்கு தகவல் கிடைத்துள்ளது. இயக்கத்தின் அரசியல் நடவடிக்கைகளுக்காக இவர் திங்களன்று நண்பகல் வவுனியாவில் இருந்து கொழும்பு சென்றிருந்தார்.

கொலையுண்ட உதயன், வவுனியா நொச்சிமோட்டை என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர் என்பதும் ரெலோ இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 29 வயதான இவர் திருமணமாகாதவர்.

(அ-164)

## மினி முகாம்கள் அகன்றன

குருநகர், ஆக 10

யாழ் பிரதான வீதித் தண்ணீர்த் தாங்கியடியிலும், றேகடியிலும் அமைந்திருந்த அமைதிப்படையின் மினி முகாம்கள் இப்போது அகற்றப்பட்டுள்ளன.

(க-51)

பல்கலைக்கழக மாணவர்

## வகுப்புப் பகிஷ்கரிப்பு நாளைவரை தொடரும்

யாழ்ப்பாணம், ஆக. 10

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம் தொடர்கின்றது. இதன் காரணமாக நேற்றும் விரிவுரைகள் எதுவும் நடைபெறவில்லை.

அமைதிப் படையினரால் விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டு ஒரு வார காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக இரண்டாம் வருட உயிரியல் விஞ்ஞான பீட மாணவன் செல்வன் தவராசாவை விடுதலை செய்யக் கோரியே தொடர்ச்சியாகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதன் முதற்கட்டமாக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்ட பேரணியும் மறியலும் இடம்பெற்றன.

நாளை வியாழக்கிழமை வரை தாம் விரிவுரைகளைப் பகிஷ்கரிக்கப் போவதாகவும், வியாழக்கிழமை காலை கைலாசபதி கலையரங்கில் கூடி இவ்விடயம் பற்றி ஆராய இருப்பதாகவும் மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

(க-5)

ஈழத் தமிழருக்காக

# றேகன் மாளிகை முன் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

## வீரமணி தலைமையில் நடந்தது

வாஷிங்டன், ஆகஸ்ட் 9

ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்தி, அமெரிக்க ஜனாதிபதி றேகனின் மாளிகைமுன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அதற்கு முதல் வாஷிங்டனின் முக்கிய வீதிகளில் சுமார் 150 தமிழர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு திராவிடர் கழகச் செயலாளர் திரு. கி. வீரமணியும் அமெரிக்காவில் வதியும் நீதிபதி திரு. எஸ். பொன்னம்பலமும் தலைமை வகித்தனர்.

தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணப்படும் வரை ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச படையையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவையும் அனுப்பவேண்டும் என்பது ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியவர்களின் பிரதான கோரிக்கையாக இருந்தது.

இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என்று கோரியும்-

அங்கு ஐ.நா. சபைப் படையையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவையும் அனுப்ப வேண்டும் என்று கோரியும்-

வாஷிங்டனில் ஜனாதிபதி மாளிகையின் முன்னர் ஆர்ப்பாட்டமும், ஊர்வலமும் நடத்தப்பட்டது.

திராவிடக் கழகச் செயலாளர் திரு.கி. வீரமணி, அமெரிக்காவில் வாழும் நீதிபதி எஸ். பொன்னம்பலம் ஆகியோர் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஜூலை 29 ஆம் திகதி நடந்தது 150க்கும் மேற்பட்ட தமிழர்கள் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குபற்றினார்கள்.

ஈழத் தமிழருக்கு ஆத

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



ஈரான்-ஈராக் போரும் முடியுது, அங்கோலாவில் பிரச்சினையும் தீருது, எங்கடை நிலைமை எப்போது மாறும் என்டது தான் தெரியவில்லை....!

## காங்கேசனில் கண்ணி வைத்தது யார்?

### அமைதிப்படை தீவிர விசாரணை

யாழ்ப்பாணம். ஆக. 10

கடந்த சனிக்கிழமை காங்கேசன்துறை அகதிகள் முகாமில் வெடித்த கண்ணிவெடியை வைத்த குழுவினர் யார் என்பது பற்றி அமைதிப்படையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இது சம்பந்தமாக இந்திய அமைதிப் படையின் பலாலி தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பிய அகதிகள் கடந்த 6ஆம் திகதி அன்று காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரியில் தங்கி தமக்குரிய தஸ்தாவேஜுகளையும் அடையாள அட்டைகளையும் பெற்றுக்கொண்டிருந்தனர்.

அப்போது திடீரென்று வெடித்த கண்ணிவெடியில் ஒரு ஜவானும், ஒரு பெண்ணும் காயமுற்றனர்.

கண்ணிவெடி வைத்தது தமிழ்ஈழ விடுதலைப் புலிகளா? அல்லது வேறு குழுவினரா என்பது பற்றி விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வேறு குழுவினரின் செயலாக இருக்கலாம் என்ற கருத்தினையும் அமைதிப் படை ஆராய்ந்து வருகின்றது.

(அ-க)

## 3-ஆம் தர அதிபர் பதவிகள்

மூன்றும் தர அதிபர்கள் தெரிவிற்கான விண்ணப்பங்கள் இலங்கை கல்வித் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

ஜூலை மாதம் 22ஆம் திகதியிட்ட வர்த்தமானியில் இந்த வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சேவைக்காலப் பயிற்சியை முடித்து 5 வருடம் சேவையாற்றிய ஆசிரியர்களே இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

போட்டிப் பரீட்சை ஒன்றின் அடிப்படையிலேயே இந்த தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

(அ-9)

## கடற்பகுதியில் விமான ரோந்து

குருநகர், ஆக 10

குடாநாட்டின் கடற்பிரதேசத்தின் மீது சில தினங்களாக சிறு விமான ரோந்து தினமும் நடைபெற்று வருகிறது.

அத்துடன் ஹெலிகொப்டர்களும் கடற்பிரதேசத்தின் மீது அடிக்கடி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றன.

(க-51)

## யுத்த நிறுத்தம்: ஈராக்கில் வெற்றி விழா

### தாக்குதலை நிறுத்த உத்தரவு

டெஹ்ரான், ஆக. 9

ஜெனிவாவில் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரக்கூடிய நிலை ஏற்படக் கூடியதாக, தாக்குதலை நிறுத்தும்படி தனது படையினருக்கு ஈரான் ஆயுதப்படையின் பிரதம தளபதி நேற்று உத்தரவிட்டார்.

இதனிடையில், யுத்த நிறுத்த அறிவிப்பை ஈராக் அரசு வெற்றி விழாவாகக் கொண்டாடும்படி தனது மக்களைக் கேட்டுள்ளது.

இதற்காக மூன்று தினங்கள் தேசிய விடுமுறை வழங்கப்பட்டிருப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சுபமுரா

10 - 08 - 88

ஆடி — 26

புதன்கிழமை

சுபநேரம்:

04.34முதல் 06.04வரை

ராகுகாலம்:

12.04முதல் 01.34வரை

இவை பலருக்கும்

இராவர்சம் பொருந்தும்

## சீனாவில் சூறாவளி

பீகிங், ஆக. 9

சீனாவில் இடம்பெற்ற சூறாவளியில் 90 பேருக்கு மேல் உயிரிழந்தனர் என்றும் 71 பேரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது.

800க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். ஆயிரக் கணக்கான வீடுகள் சேதமடைந்தன. (அ-எ)

## வவுனியாவில் வங்கிகள் மூடப்பட்டன

வவுனியா, ஆக. 10

செவ்வாய் முதல் வவுனியாவில் உள்ள சகல வங்கிகளையும் மறு அறிவித்தல் வரும்வரை மூடும்படியாக இந்தியப் படையினர் உத்தரவிட்டுள்ளனர். எனினும் மக்கள் வங்கி அடைவு நகைகளை மீளளிக்கும் கடமைகளை மட்டும் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நேற்றுச் செவ்வாய் காலை வழமைபோல கடமைக்காக வங்கிகளுக்கு வந்த ஊழியர்கள் வங்கிகளின் முன்னால் நின்றிருந்த போது அங்கு ஆயுதங்களுடன் வந்த படைவீரர்கள் இந்த உத்தரவைப் பிறப்பித்தனர். ஊழியர்கள் வீடுகளுக்குத் திரும்பினர். வங்கிகள் திறக்கப்படவில்லை.

சுமார் ஒருமாதகாலமாக தமிழீழ விடுதலைப் புலிகள் சிவில் நிர்வாகச் சீர்குலைப்பு நடவடிக்கையை அமுல்படுத்தி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பூஸா முகாமிலிருந்து 10பேர் மட்டும் விடுதலை

யாழ்ப்பாணம், ஆக. 10

பூஸா தடுப்பு முகாமில் இருந்த மொத்தம் 454 தமிழ் அரசியல் கைதிகளில் பத்துப்பேர் மட்டும் கடந்தமாத இறுதியில் விடுவிக்கப்பட்டனர்.

நோயாளிகள், 15 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள், 50வயதுக்கு மேற்பட்டவர்கள், மனத் தாக்கம்ஏற்பட்டவர்கள் என்றநான்கு வகைகளில் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

தம்மைவிடுதலைசெய்யுமாறும் இல்லையேல் இன்று பத்தாம் திகதி தொடக்கம் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் — பூஸாவில் உள்ள அரசியல் கைதிகள் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனாவுக்கு கடந்த மாதம் 23ஆம் திகதி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தனர்.

அந்த உண்ணாவிரதப் போராட்டத்தைத் தடுக்கும் நோக்கத்துடனேயே கடந்தமாத இறுதியில் பத்துப்பேரைச் சிறை அதிகாரிகள் விடுவித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

திருமலைக் கச்சேரித் தமிழ் ஊழியருக்கு

## இலங்கை இராணுவம் பாதுகாப்பு வழங்கும் எனக் கூறி

### வேலைக்கு வர அழைப்பு

திருகோணமலை, ஆக 10

திருமலைக் கச்சேரியில் பணியாற்றும் தமிழ் அரசாங்க ஊழியர்களின் குழுவொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை திருமலை இணைப்பதிகாரியைச் சந்தித்தது.

இணைப்பதிகாரி விடுத்த அழைப்பை ஏற்றே கடற்படைத் தளத்திலுள்ள அவரின் அலுவலகத்தில் தூதுக்குழு சந்தித்தது.

இக்குழுவில் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி, திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. புலேந்திரன், திரு. சிறிஸ்காந்தராசா, திரு ஆர். கலியுகவரதன் ஆகியோருடன் வேறு மூவரும் சென்றிருந்தனர்.

இணைப்பதிகாரியுடன் அரசாங்க அதிபர் திரு. டி. எம். ஆரியரத்தின

(6 ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

"அர்ச்சுனா"

வாங்கிப் படித்து விட்டீர்களா?

மாணவன் வரைந்த வர்ண ஓவியம் முகப்பு அட்டையை அலங்கரிக்கும்...

வைத்தீஸ்வர வித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி, வண்ணை நாவலர் மகாவித்தியாலயம், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வண்ணார்பண்ணை இளையதம்பி தமிழ் வித்தியாலயம், சென்ஜோன்ஸ் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி மாணவர் கைவண்ணம் மணமூட்டும்... சிறுவர் இலக்கிய அறிஞர் ஆக்கங்கள் எழிலூட்டும்.

ஆகஸ்ட் இதழ்

விலை: ரூபா 4-00 மட்டுமே.

சிறுவரின் அறிவுப் பசிக்கு நல்விருந்து! "அர்ச்சுனா" பிரதிகளை வாங்க உதயன் முகவர்களை நாடுங்கள்..!

## வடக்கு, கிழக்குப் பகுதிகளை சமாதானப் பிரதேசமாக்க

### புலிகளுக்கு ரெலோ வேண்டுகோள்

வவுனியா, ஆக 10

இந்தியாவுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்தி இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளை சமாதானப் பிரதேசமாக்க விடுதலைப் புலிகள் தியாக மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு ரெலோ இயக்கத்தின செயலதிபர் அ. செல்வம் அறிக்கை ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் அமைதியும், சமாதானமும் ஏற்பட்டு தமிழ்பேசும் மக்கள் நிம்மதியாக வாழ வழிசெய்வதற்காக விடுதலைப் புலிகள் இந்திய அரசுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும்.

மூன்றும் மண்டல நாடுகளின் வல்லரசாக விளங்கும் இந்தியாவுடன் விடுதலைப் புலிகள் போரிடுவதானால் பொருளாதார சிரமமும் பொதுமக்கள் இளம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சகல விதமான ரேடியோ, வீடியோ T. V ஆகியவற்றின் உதிரிப்பாகங்களையும் வீடியோ Head) ICடிரான்சிஸ்டர் அன்ரனு, பூஸ்டர் ஆகியவற்றையும் பதிவு செய்து Audio செஸ்ட் ஆகியவற்றை நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள். R. V. Centre, 1 st Floor No, F 6. Model Market, Jaffna. உரிமையாளர்: விசு. (5661)

அராலி தெற்கில் 13 பரப்பு தென்னங்காணியும் 2 கிணறும் அத்துடன் Hittachi T. V 20'' கலர்) ஒன்றும்விற்பனைக்குண்டு. தொடர்பு; 83, சிவப்பிரகாசம் ரோட், யாழ்ப்பாணம். (5497)

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards). திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் இனிய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 14B, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

நீக்கொண்டிஷன், ஹொண்டா C 50, C 70 90, Racoon விற்பனைக்கு உண்டு. திருவாசி, தூபி, பெரியமணி, குத்துவிளக்கு, Sports Cups மற்றும் கோயில் பொருள்களும், கிடைக்கும். இடம் ஸம்ஸ் 26/B. மானிப்பாய் வீதி, கிளை:- 6/2. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5653)

### Dolly Tea டொலி தேயிலை

அதிக சுவை, கூடிய சாயம்; நறுமணம்: இலவச ஸ்ரிக்கர்; இத்தனைக்கும் உடனே நாடுங்கள்: டொலி தேயிலை. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விலாசம்:-டொலி, நல்வயல் வீதி, நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி. (5660)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann வெள்ளை சிவப்புப்பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், HY Line கறுப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (சி/6066)

### இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- Nallur Farm Centre, C/o, நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C/6063]

## தேவை

கௌரவமான வசதியான உத்தியோகத்தர் குடும்பத்திற்கு சகல வசதிகளுடனும் கூடிய வீடொன்று யாழ் மாநகர சபைக்குள்ளோ அல்லது கொக்குவில், திருநெல்வேலி ஆகிய இடங்களிலோ வாடகைக்குத் தேவைப்படுகின்றது. தொடர்பு: க. யாகராசா 50/1, பிற... ரோட், யாழ்ப்பாணம். (5703)

### தேவை

நல்லூர், ... வேலி, ... பகுதிகளில் ... வாடகைக்குத் தேவை. தொடர்பு:- விளம்பர இல 176 C/o உதயன் யாழ்ப்பாணம். (5706)

### காணி தேவை

யாழ் மாநகர சபை எல்லைக்குள் பிரதான வீதிகளில், வர்த்தகம் செய்வதற்கு வீட்டுடன் சேர்ந்தோ அல்லாமலோ 1½—2 பரப்புக் காணி உடன் தேவை. தொடர்பு கொள்ளவும்: 320, C/o உதயன், யாழ்ப்பாணம். (5664)

### மரத்தொழிலகம் தேவை

வீடும், சக்கரவாள், வாட்டுவாள், அமைந்த தொழிலகமும் மாநகர சபை எல்லைக்குள் வாடகைக்கு — அல்லது கொமிஷன் அடிப்படையில் தேவை. தொடர்பு: 319, C/o உதயன், யாழ்ப்பாணம். (5662)

### Wanted House For Rent

In a good Environ-ment with all Facili-ties Immediately. Rev. D. G. Poul Raj 15, St. Peter's Lane, Jaffna. (5705)

### தொழிற் கல்வி

புதிய பிரிவுகள் ஆரம்பம் — 19 - 8 - 88. 1. Radio Officers (Ship) P. M. G., 2. Electronics, 3. Telex Operators-(International) இருபாலாரும். பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும். தொடர்பு: Keen Centre—Thirunelvely. (5545)

### பயிற்சிகள்

Radio - T. V, Air-Condition - Refrigeration, வயறிங், வெல்டிங் வைண்டிங், மோட்டர் மெக்கானிசம். பிளம்பிங், Typing, Spoken English மீண்டும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. அனுபவமுள்ள ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering, Aid Hall, 328. நாவலர் ரோட், (ஆனைப்பந்தி சந்திக்கு அருகாமை) Jaffna. (5496)

### அடையாள அட்டை தவறிவிட்டது

... இரா... சங்கானை ... சங்கானை ஆகிய... அடையாள அட்டை யாழ். பஸ் நிலைய சுற்றுடலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது மேல் விலாசத்தில் ஒப்படையுங்கள். நன்றி. (5660)

### வீடியோ படப்பிடிப்பு

அதி நவீன வீடியோ கமரா மூலம் திருமணம், பிறந்த நாள் நிகழ்ச்சிகளை வண்ணக் கலர்களில், இந்தியாவிலும், இலங்கையிலும் பல வருடங்கள் வீடியோ படப் பிடிப்பில் அனுபவமுள்ள கமரா இயக்குநர்கள் மூலம் வீடியோ படமாக்கிக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்: விக்ரர் அன் சன்ஸ் (விக்ரேர்ஸ்), இல. 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். விக்ரேஸ் மியூசிக் சென்ரர், இல. 887, ஆஸ்பத்திரி வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (C/605...)

### பொறியியல் சேவை

வீடு, வியாபார நிலையம், தொழிற்சாலைக் கட்டிடங்கள் தொழில்நுட்ப ரீதியில் வடிவமைத்தல், வரைபடங்கள், மதிப்பீடுகள் தயாரித்தல், நிர்மாணித்தல் என்பன மிக உயர்தரத்தில் செய்து தருகின்றோம். தொடர்புகள், யூரோவில், 449, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (5663)

# கட்டுவனில் இப்போது இராணுவத்தினர்

பலாலி, ஆக. 10

இந்திய மத்திய றிசேர்வ் பொலீஸாரின் கட்டுப்பாட்டிலும், காவலிலும் இருந்த கட்டுவன், மயிலிட்டி, பலாலி விமானநிலையச் சந்தியில் இப்போது இந்திய இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இராணுவ வாகனங்கள் சகிதம் கட்டுவன் சந்திக்கு வந்துள்ள இராணுவத்தினர், கட்டுவனின் சுற்றுப்புறங்களில் நடை ரோந்தினை அதிகரித்துள்ளனர்.

குரும்பசிட்டி, கட்டுவன், ஏழாலை, வறுத்தலை விளான், மயிலிட்டிப் பகுதிகளில் அடிக்கடி ரோந்துகள் இடம்பெறுகின்றன. (அ-119)

## இலகு கடனில் தெளிகருவி

பண்டத்தரிப்பு, ஆக. 10

யாழ். மாவட்ட பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கிருமிநாசினி தெளிகருவிகள் இலகு கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட கமநலசேவைப் பணிப்பாளர் திரு. க. பரமலிங்கம் இதனைத் தெரிவித்தார். (இ - 120)


# SHABRA

வட பிராந்திய மக்களின் நலன்கருதி பின்வரும் சேவையை

## மீண்டும் ஆரம்பித்துள்ளது

- ✶ ஆங்கில ஸ்ரென்ஸில் கட்டிங் English Stencil Cutting
- ✶ தமிழ் ஸ்ரென்ஸில் கட்டிங் Tamil Stencil Cutting
- ✶ ரோனியோ பிரதி செய்தல் Roneo Duplicating
- ✶ ஆங்கில, தமிழ் ரைப்பிங் English, Tamil Typing
- ✶ கடிதம் எதுவாயினும் தயார் செய்து கொடுக்கப்படும். English, Tamil-Correspondence

பல வருட அனுபவம் உள்ள ஊழியர்கள் மேல் குறிப்பிட்ட சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். குறுகிய நேரத்தில் குறைந்த கட்டணத்தில் திறமையான சேவையை உங்களுக்குக்கொடுப்பார்கள்.

நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

'ஷப்ரு' 207, மின்சார-நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

'SHABRA' 207, Power-House Road, JAFFNA.

C-6083


### அரையாண்டு நினைவஞ்சலி



தோற்றம்:- 10-04-1938

மறைவு:- 10-02-1988

திதி: 10. 8. 1988

திரு. நாகமணி நேசராசா

அரையாண்டு ஆகுதண்ணா!
ஆறுமோ எங்கள் மனம்!
ஆனாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சில் அண்ணா!

'சுபா அகம்' காந்திஜி வீதி, கொக்குவில். (5609)

### சங்கானை பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம் (வ.உ)

## முக்கிய அறிவித்தல்

கிளைக்குழுத் தேர்தலுக்காக அங்கத்தவர் இடாப்பு 30-9-88 உடன் மூடப்படவுள்ளது.

புதிய அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் தங்களுக்கு அண்மையில் உள்ள கிளைகளில் உரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்று பூர்த்தி செய்து மேற்குறித்த திகதிக்கு முன் அங்கத்துவப் பணமாக ரூபா 1/- கிளை முகாமையாளரிடம் செலுத்தி அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளவும்.

செயலாளர்:

சங்கானை ப. நோ. கூ. சங்கம்.

5-8-88 (C-6137)

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின்

## முக்கிய அறிவித்தல்

இத்தால் சகல போக்குவரத்து வாகனங்களும் 17 - 08 - 1988 - அதிகாலை 12 - 01 மணியிலிருந்து 12 - 09 - 1988 நள்ளிரவு 12-00 மணி வரைக்கும் கீழ்வரும் பாதைகள், தெருக்கள் நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழாவை முன்னிட்டு போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்

- ★ அரசடிச் சந்திக்கும் 2 ஆம் கட்டைத் தூணுக்கும் இடைப்படும் பருத்தித்துறை வீதியின் அப்பாகம்.
- ★ பிராமணக் கட்டுக்குளச்சந்தியிலிருந்து சங்கிலியன் வீதிச் சந்திக்கு இடைப்படும் கோவில் வீதியின் அப்பாகம்.
- ★ செட்டித்தெரு ஒழுங்கையிலிருந்து செட்டித்தெருவின் அப்பாகம்.
- ★ பஸ் வண்டிகள், மினிபஸ்கள் மற்றும் சுமை கூடிய வாகனங்கள் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நாவலர் வீதி வழியாக கச்சேரி நல்லூர் வீதிச் சந்தி வழியாக முத்திரைச் சந்தையடிச் சந்தியூடாகச் செல்லல்.
- ★ 2-ம் கட்டை குறுக்கு வீதியிலுள்ளவர்கள் மட்டுமே தமது வாகனங்களை அவ்வீதியில் பாவிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

எனவே, சகல வாகன உரிமையாளர்களும் இவ்விடயத்தில் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றேன்.

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்.
மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

5. 8. 88 (C 6139)


# CEYGMA PUMPS சிக்மா பம்ப்ஸ்

## விலை குறைப்பு

எமது தொழிற்சாலை மீண்டும் நாவற்குழியில் இயங்குவதால் உற்பத்திச் செலவு குறைந்துள்ளது. அதற்கேற்ப எமது மின் மோட்டர்களின் விலைகளைக் குறைத்துள்ளோம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

புதிய விலைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1/2 | HP | — | 1'' | x 1'' | — | 3500-00 |
| 1/2 | HP | — | 1 1/2'' | x 1 1/4'' | — | 3950-00 |
| 1 | HP | — | 1 1/2'' | x 1 1/4'' | — | 4750 00 |
| 1 | HP | — | 2'' | x 1 1/2'' | — | 5250 00 |
| 1 1/2 | HP | — | 2'' | x 2 | — | 5850-00 |

குபோடா என்ஜினுடன் பொருத்தப்பட்ட 2'' Pump —8250-00

ஒரு வருட உத்தரவாதம்! விற்பனைக்குப் பிந்திய சேவை!!

உங்கள் தேவைகளுக்கு நாடுங்கள்:

யுனைற்றெட் அக்ரோ என்ஜினியரிங்
UNITED AGRO ENGINEERING
274/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(பெரியாஸ்பத்திரி முன்பாக)

தொழிற்சாலை: நாவற்குழி - கைதடி. (C 6135)


## Wanted

An English Steno-Typist with at least 12 years experience for work at North Lanka Medical College Departments at the Co-operative Teaching Hospital, Moolai. Applications from retired personnel will also be entertained. Preference will be given to those residing close to Moolai. Apply on or before 20-08-1988 to:

Hony Secretary,
Board of Governors,
North Lanka Medical College,
164, Fourth Cross Street, Jaffna.

(C6101)

# கனடா வாழ் கொக்குவில் மக்களின் பேருதவி

கனடாவில் வாழும் கொக்குவில் மக்கள் கடந்த 1987 அக்டோபர் மாதம் நடந்த வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட கொக்குவிலை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட மக்களுக்கு அளிப்பதற்காக நிதி சேர்த்து அனுப்பியிருந்தனர். அவர்களது நிபந்தனைகளுக்கு அமைய மரணமடைந்தோர், மற்றும் வீடுகள் சொத்துக்கள் பாதிப்படைந்தோர் ஆகிய குடும்பங்களைத் தெரிவுசெய்து இந்நிதியைப் பங்கிட்டு வழங்க ஒரு நிதிக் கட்டுப்பாட்டுக் குழு அமைக்கப்பட்டது. இந்நிதிக் கட்டுப்பாட்டுக் குழுவில் பின்வருவோர் அங்கம் வகித்தனர்.

திரு. ந. ஜெகதீஸ்வரன் (கிராம சேவை அலுவலர் கொக்குவில் மத்தி J/60) திருமதி சு. சுப்பிரமணியம், திருவாளர்கள் M. மாணிக்கவாசகர், K. பாலசுப்பிரமணியம், S. லோகேந்திரன், R. இராஜலிங்கம், S நாகலிங்கம், து. வைத்திலிங்கம் (உதவி அரசாங்க அதிபர்), R. செல்வராஜா, S. ஜெகதீஸ்வரன், S. உமாசங்கர், N. பாலகுமார், N. யோகநாதன் ஆகியோர்.

### நிவாரணம் பெற்றோர்

இறப்பு நிகழ்ந்து பாதிப்புற்ற குடும்பங்கள்-19
வீடு மற்றும் சொத்திழந்து பாதிப்புற்ற குடும்பங்கள்-8
இறப்பு நிகழ்ந்து பணம் பெற்றவர்களது விபரங்கள் பின்வருமாறு.

1. குலேந்திரன் வசந்தி — பிரம்படிலேன் கொக்குவில்
2. விஜயரத்தினம் லீலாவதி ,, ,,
3. நந்தகுமார் மேரி ,, ,,
4. சுந்தரம் ரெத்தினம் ,, ,,
5. இந்திரன் புனிதவதி - பொற்பதி பிள்ளையார் மேற்குவீதி
6. சிவகுருநாதன் நாகரஞ்சினி — பொற்பதிவீதி, கொக்குவில்
7. முத்தன் சின்னத்தங்கச்சி ,, ,,
8. மகேஸ்வரி வீரசிங்கம் ,, ,,
9. பொன்னி பொன்னன் ,, ,,
10. சாமுண்டீஸ்வரி குணபாலசிங்கம் ,,
11. இராசேந்திரம் இராசமலர்— ,,
12. சோதிநாதன் தவரஞ்சிதம் — சம்பியன்லேன் கொக்குவில்
13. அருணாசலம் பரிமளம்— சுந்தரபவனம் கே. கே. எஸ். வீதி,
14. சுப்பிரமணியம் கமலாதேவி— ஆனைக்கோட்டை வீதி, குளப்பிட்டி
15. ச. விஜிலியா— நாவலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கு
16. நவரெத்தினம் அழகரத்தினம் — சொர்ணவடலி, கொக்குவில் மேற்கு
17. தில்லையம்பலம் மகேஸ்வரி— சிவகுருலேன், கொக்குவில் மேற்கு
18. துரைராசா நாகேஸ்வரி— வராளி கோயிலடி, கொக்குவில் மேற்கு
19. சிவலிங்கம் மகேஸ்வரி— கேணியடி, கொக்குவில் மேற்கு

### சொத்து இழப்பால் பாதிப்புற்று பணம் பெற்றவர் விபரம்

1. சுந்தையா குமாரசாமி — பிரம்படி, கொக்குவில்
2. இ. புவனேஸ்வரி — மில் லேன், பிரம்படி
3. சி. சின்னராசா— சேச் லேன் கொக்குவில் மேற்கு
4. து. திருக்கேதீஸ்பர கௌரிபாலன்— புதுக்கோயில் வீதி, கொக்குவில்
5. கு. நாகேஸ்வரன்— கொக்குவில் சந்தி, கொக்குவில்
6. இரத்தினம் பாலசிங்கம்— குளப்பிட்டி சந்தி, கொக்குவில்
7. அழகக்கோன் சிவயோகேஸ்வரி— ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு
8. செல்லையா கனரெத்தினம்— ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில்

இணைச் செயலாளர்கள்
நா. பாலகுமார்
சு. உமாசங்கர்

(5638)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகளிர் கல்லூரியில் சமயவாரம்

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் கடந்த வாரம் சமய வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் திருமதி எஸ். கல்யாணசுந்தரேசன் தலைமையில் ஆண்டு 10, 11ஐ சேர்ந்த மாணவிகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுக்கொண்டனர்.

கல்லூரிமுருகன்கோவிலில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெற்றன.

உயர்தர வகுப்புமாணவிகளினல் வள்ளி திருமணம், மதிமயக்கம், திருமணப்பந்தலிலே போன்ற நாடகங்களும், வில்லுப்பாட்டு, இசை நிகழ்ச்சிகள், சமயச் சொற்பொழிவுகள் ஆகியனவும் நிகழ்த்தப்பட்டன. (இ-90)


# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

**தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.**

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ.

Pfizer

சில்லறை விலை ரூ.39/90 200 மி. லீ.

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


# புதுக்குடியிருப்புப் பகுதியில்

## கோமாரி நோய் வேகமாக பரவுகிறது

## காட்டுப்பன்றிகளும் இறக்கின்றன

யாழ்ப்பாணம், ஆக. 10

புதுக்குடியிருப்பு பகுதியில் ஏற்பட்டுள்ள கோமாரி நோய் காரணமாக ஏராளமான கால்நடைகள் இறந்துள்ளன. காட்டுப் பன்றிகளும் இந்த நோய்க்குப் பலியாகி வருவதாகத் தெரிகிறது.

கோமாரி நோயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்வரை எவ்வித இறைச்சியையும் உண்ண வேண்டாம் என புதுக்குடியிருப்பு மேற்கு பிரசைகள் குழு புதுக்குடியிருப்பு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக பிரசைகள் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இந்நோய் கால்நடைகளில் தொற்றியிருக்கும் அறிகுறிகளை பொதுமக்கள் கண்டுகொள்ள முடியாதுள்ளது.

நோயின் அறிகுறிகளைக் கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தவறிவிட்டனர்.

இதனுல் இந்நோய் ஏனைய பகுதிகளுக்கும் பரவும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

## கம்பன் விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 10

அகில இலங்கைக் கம்பன் கழகம் இன்று 10 ஆம் திகதியில் இருந்து நடத்தவிருந்த கம்பன் விழா நாட்டுச் சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இத்தகவலைக் கம்பன் கழகச் செயலாளர் திரு. குமாரதாஸன் தெரிவித்தார்.

இவ்விழாவை எதிர்வரும் செப்டம்பர் மாத நடுப்பகுதியில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

(இ-160)

## விசேஷ சித்தி

யாழ்ப்பாணம், ஆக.10

பொலிகண்டியை பிறப்பிடமாகக்கொண்ட திரு. ம. ஸ்ரீ முருகவஸந்தன் 1988 ஜூன் மாதம் லண்டனில் நடைபெற்ற எலக்ரோனிக் பொறியியல் துறையில் பட்டப் பரீட்சையில் விசேட சித்தியடைந்து பட்ட மேல் படிப்பிற்கு(M.Sc) தகுதி பெற்றுள்ளார்.

இவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியினதும் யாழ்தொழில்நுட்பக் கல்லூரியினதும் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. [இ-5]

# செக்கடிப்புலவு தேடுதலில் 6பேர் கைது!

வவுனியா, ஆக.10

கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை செக்கடிப் புலவு பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட தேடுதலில் 6 குடும்பஸ்தர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

காயம் அடைந்த ஐவர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விபரம்:- 1. க. குமாரசிங்கம் (48 வயது), 2. க. செல்லத்துரை (55 வயது) [சகோதரர்கள்] 3. செ. தேவராசா (30 வயது), 4. சி. செல்வநாயகம் (32வயது), 5. அன்பழகன் (24 வயது), 6. சி. அமிர்தராஜா (30 வயது).

ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றோர்:- 1. செல்வநாயகம் சிவஞானம் (30 வயது), 2. செல்வநாயகம் சிவபாலன் (22 வயது) [சகோதரர்கள்], 3. குமாரசிங்கம் குணரஞ்சன் (17 வயது), 4. ஆறுமுகம் கணேஷ்வரன் (24வயது) 5. திருஞானசம்பந்தன் ஜெயகாந்தன் (15வயது) (இ-164)

# கம்யூனிஸத்தை வளர்க்க உழைத்தவர் அமரர் வைத்தி

## கலவான எம். பி. இரங்கலுரை

யாழ்ப்பாணம், ஆக 10

தனது வாழ்நாளில் அரைவாசிக்கும் மேற்பட்ட காலத்தை, கம்யூனிஸத்தை வளர்ப்பதற்காகவே செலவிட்டவர் அமரர் வைத்திலிங்கம்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், ஸ்தாபகர்களில் ஒருவருமான அமரர் அ. வைத்திலிங்கத்தின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்திய கலவானத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டியு. குணசேகர இவ்வாறு குறிப்பிட்டார்.

அமரர் வைத்திலிங்கத்தின் இறுதிச் சடங்குகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நீராவியடியில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இதில் கலந்து கொள்வதற்காக திரு. டியூ குணசேகர, ஐக்கிய சோசலிஸ முன்னணிச் செயலாளர் ராஜா கொலுரர், கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பாளர் எஸ். சுந்தரசிங்க ஆகியோர் கொழும்பில் இருந்து வந்திருந்தனர்.

கம்யூனிஸத்தைத் பரப்புவதோடு நின்றுவிடாது. தமது வாழ்க்கையிலும் அதனைப் பின்பற்றியவர் அமரர் வைத்திலிங்கம் எனவும் திரு. டியூ குணசேகரா தமது உரையில் மேலும் தெரித்தார்.

## சடலம் உறவினரிடம்

தாளையடி, ஆக.10

வடமராட்சி கிழக்கில் உள்ள மருதங்கேணி என்னுமிடத்தில் ''சயனைட்'' அருந்தி மரணமான இளைஞனின் சடலம் உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

இளைஞரின் சடலம் வெற்றிலைக்கேணி அமைதிப் படையினரின் முகாமில் வைத்து உறவினரிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

(இ-160-144)

## கழகம் நடவடிக்கை

கிளிநொச்சி, ஆக.10

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின் சென்னையிலிருந்து அகதிகளாக வந்து கிளிநொச்சி செல்வா நகரில் தஞ்சமடைந்த குடும்பங்களில் சுமார் 11 குடும்பங்களுக்கும், கிளிநொச்சி அசம்பாவிதங்களினல் பாதிக்கப்பட்ட மக்களில் கிருஷ்ணபுரம் பகுதியிலும்- 10 குடும்பங்களுக்கு சலோன் நக தற்காலிகவீடுகளை அமைத்துக் கொடுக்க கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

(இ - 67)


# இலங்கையிலே முதன் முறையாக வட மாகாணத் தண்ணீருக்கேற்ற வகையில் தயாரிக்கப்பட்ட சிறந்த ரக தேயிலை !




தேநீர் தயாரிக்கும் முறை:

ஒரு தேக்கரண்டி 'தங்கம் தேயிலை'யை நன்ருகக் கொதித்த ஒரு கோப்பை தண்ணீரில் கலந்து இரண்டு நிமிடத்திற்கு மூடிவைக்கவும்.

நன்ருகக் கலக்கிய பின் மீண்டும் இரண்டு நிமிடத்திற்கு மூடிவைக்கவும். தேயிலையை வடித்த பின் பாலும் சீனியும் அளவுடன் சேர்த்துப் பரிமாறவும்.

ஏக விநியோகஸ்தர்:

**மேடிக்கல் ஹோல்**

224, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தயாரிப்பாளர்:

**Ceylon Commodity Marketing [Pvt.] Ltd.**
P.O. Box: 640, Colombo,

குறிப்பு: மூவர்ண நிறத்தில் அச்சிடப்பட்டிருக்கும் மேற் காட்டிய எமது வியாபாரச் சின்னம் கொண்ட பைக்கட்டுகளை அவதானித்து வாங்கவும்.

(C 6113)


மட்டக்களப்பு புனர் வாழ்வு முகாம் கைதிகளை

# உறவினர் பார்ப்பதற்கான அனுமதி ரத்து

மட்டக்களப்பு இந்தியப்படை புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நபர்களை பிரதி ஞாயிறு தோறும் உறவினர்கள்பார்வையிடல்உணவு,உடுதுணிவழங்குதல் போன்றவற்றிற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதிதற்போதுரத்து செய்யப்பட்டுள்ளது.

இம் முகாமில் மாவட்டத்தில் கைது செய்யப்பட்ட முக்கியஸ்தர்களான சித்தா ,ரொமேஷ் திலீப், சங்கர் ஆகியோருடன் இருபெண்கள் உட்பட 140 பேர்வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள் என்றும் இதற்கான தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் முகாம் பொறுப்பதிகாரி ஏற்கனவே அறிவித்திருந்தார்.

மேற்படி முகாம் சிறைச்சாலையில் இயங்குகின்றதென்பது குறிப்பிடத்தக்கது. (இ-21)


# RIETAS ENTERPRISES

## A. பத்மதாஸ்

# பிரயாண ஒழுங்குகள்

## சவூதி குவைத் அபுதாபி

மேற்குறிப்பிட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கு கீழ்க் காணும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பிப்போர் எமது காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

* தச்சுவேலையாட்கள்
* மேசன்
* ஸ்ரீல்பிக்சர்ஸ்
* சாரதிகள்
* சுத்திகரிப்பாளர்
* தொழிலாளர்
* பணிப்பெண்கள்.

கடந்த இரு வாரங்களில் பயணம் மேற்கொண்டோர் பெயர் விபரம் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | நடராஜா அன்னலிங்கம் | — | ஊர்சாவற்றுறை |
| 2 | இரட்ணம் நாகேந்திரம் | — | அச்சுவேலி |
| 3. | டக்ளஸ் ஜோன்சன் | — | பண்டத்தரிப்பு |
| 4. | சொலமன் சாள்ஸ் | — | பருத்தித்துறை |
| 5. | கணபதி தியாகராஜா | — | கரவெட்டி |
| 6. | ஐயாத்துரை பார்த்தீபன் | — | மண்டைதீவு |
| 7. | கபிரியேல்பிள்ளை கருணைநாதன் | — | வசாவிளான் |
| 8. | இராஜரட்ணம் உதயசோதி | — | அல்லைப்பிட்டி |
| 9. | சேதுராஜா சிறீவாசன் | — | மண்டைதீவு |
| 10. | சேவியர் சாந்தகுமார் | — | பருத்தித்துறை |
| 11. | கிறிஸ்ரோபிலர் பிலரோன் | — | யாழ்ப்பாணம் |
| 12. | நவரட்ணம் சசிந்திரன் | — | மானிப்பாய் |
| 13. | மதியூஸ் தாசியஸ் | — | ஆனைக்கோட்டை |
| 14. | ஐயம்பிள்ளை சத்தியாவதி | — | சாவகச்சேரி |

அடுத்த இரு வாரங்களில் பயணம் மேற்கொள்ள இருப்போர் பெயர் விபரம் பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | வேலன் சின்னையா | — | இளவாலை |
| 2. | இராமலிங்கம் துரைமணி | — | நல்லூர் |
| 3. | பாலசிங்கம் ஜெதீஸ்வரன் | — | பூநகரி |
| 4. | இலங்கையர் குநாதன் | — | வல்வெட்டித்துறை |
| 5. | குஞ்சுத்தம்பி சத்தியசிலன் | — | வரணி |
| 6. | துரைசிங்கம் நந்தகுமார் | — | பண்டத்தரிப்பு |
| 7. | முருகன் குணசிங்கம் | — | கரவெட்டி |
| 8. | திருச்செல்வம் சுரேந்திரன் | — | நாவாந்துறை |
| 9. | சுப்பிரமணியம் மகாதேவா | — | அல்வாய் |
| 10. | சபாரட்ணம் பயில்வாகலம் | — | தெல்லிப்பளை |
| 11. | சின்னத்துரை சாந்தகுமார் | — | நாவாந்துறை |
| 12. | வேலுடபிள்ளை ரவீந்திரன் | — | வல்வெட்டித்துறை |
| 13. | செல்லன் கந்தசாமி | — | தாளையடி |
| 14. | கணபதிப்பிள்ளை நடராஜா | — | வரணி |
| 15. | சதிரவேலு இரட்ணசிங்கம் | — | நாவாந்துறை |
| 16. | ஜோன் செல்வரட்ணம் | — | தெல்லிப்பளை |
| 17. | கந்தசாமி ஸ்ரீவிட்ணுபதி | — | சாவகச்சேரி |
| 18. | பிலிப் அருள்ஞானம் | — | அல்லைப்பிட்டி |
| 19. | தங்கராஜா தங்கவேல் | — | வல்வெட்டித்துறை |
| 20. | நித்தியானந்தசாமி சண்முகநாதன் | — | பருத்தித்துறை |
| 21. | [illegible] | — | பெரியவிளான் |

தொடர்புகொள்ள விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8-00 மணிமுதல் மாலை 4-00 மணிவரை நேரில் சமுகம் தரவும்,

உபமுகவர்கள் :-

**V. விஜயகுமார்**
ஊறணி,
வல்வெட்டித்துறை.

**S. அன்ரனிமுத்து**
"மரீஞ"
4ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.

**T. லோகநாதன்**
காளிகோவிலடி,
ஏழாலை மத்தி,
ஏழாலை.

தலைமை அலுவலகம் :-

# A. பத்மதாஸ்

97/1, பருத்தித்துறை வீதி.
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

### செல்வன் கு. பாலகுமாரன்

கந்தரோடை சித்தியார் வளவைச் சேர்ந்த குமாரவேலுப்பிள்ளை - புனிதவதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பாலகுமாரன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (10- 08- 88) குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

பாலகுமாரன் சகல செல்வமும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ அப்பா, அம்மா, அக்காமார், தாத்தா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அண்ணா, பிரான்ஸ் மாமா, பிரான்ஸ் சித்தப்பா, சித்தி, அக்கா, அண்ணா சவூதி மாமா, அப்பப்பா, மாமி ஆகியோர் உளமார வாழ்த்துகின்றார்கள்.

தி. குமாரவேலுப்பிள்ளை.

(5635)


## புதிய தொழில் பயிற்சிகள்

வார, வார இறுதி நாள் வகுப்புக்கள்

**Radio, T. V. & Deck Aircondition and Refrigeration**

ஆரம்பம்: 10- 08- 88

# North Ceylon Technical Institute

14, St. Peters Lane,
Hospital Road, Jaffna.

(C/6112)



## பிரயாண ஒழுங்குகள்

பின்வரும் வேலை வாய்ப்புகளுக்கு எம்மிடம் வெற்றிடங்கள் உண்டு.

* சவூதி அரேபியா
* குவைத்
* அபுதாபி

| | |
|---|---|
| கூலி வேலையாட்கள் | (Labourers) |
| கிளீனேர்ஸ் | (Cleaners) |
| சாரதிகள் | (Drivers) |
| சாரதிகள் (கனரக வாகனம்) | (H.V.Drivers) |
| பணிப் பெண்கள் | (House Maids) |
| மேசன் | (Mason) |
| தச்சு வேலையாட்கள் | (Carpenters) |
| தையற்காரர்கள் | (Tailors) |

**ஜேர்மனி செல்வதற்கு இரண்டு கிழமைகளில் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.**

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

மற்றும் சகல தரப்பு வேலைகளுக்கும் பலதரப்பட்ட தகுதிகளில் எம்மிடம் வெற்றிடங்கள் உண்டு.
உங்கள் முன்னேற்றத்திற்கு எங்கள் ஒத்துழைப்பை நல்க விரும்புகின்றோம்.
எமது சேவையில் இலவச ஆலோசனையும் வழங்கப்படும்
மற்றும் அன்டர் ஸின் அவசரத்திற்கேற்ப

பாஸ்போட், **Bonding, Ticketing,**
**வெளியூர் பிரயாண ஒழுங்குகள்**
சகலதும் செய்து கொடுக்கப்படும்.
உள்நாட்டு பிரயாண ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

**ஒரு மாத காலத்திற்குள் குவைத் நாட்டிற்கு Baladiya வேலைக்கு ஆட்கள் அனுப்பிவைக்கப்படுவர்**

தொடர்பு:

# SUJERA TRAVELS & TOURS

**சுஜேரா ரவல்ஸ் அன் ரூர்ஸ்**
21, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

(C 6006)


## கற்சிலைமடு கிராமம் சுற்றிவளைக்கப்பட்டது!

### கிராமவாசிகள் தடுத்துவைப்பு!!

ஒட்டுசுட்டான், ஆக. 10

ஒட்டுசுட்டானுக்கு அண்மித்த கற்சிலைமடு கிராமத்தை அமைதிப் படையினர் வெள்ளிக்கிழமை காலை திடீரென சுற்றிவளைத்தனர். அப்போது எழுநூற்றுக்கும் மேற்பட்ட கிராமவாசிகள் கற்சிலைமடு பாடசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:

வெள்ளிக்கிழமை காலை ஒட்டுசுட்டான் முத்து ஐயன் கட்டு முகாம்களிலிருந்து ஆயிரக்கணக்கான அமைதிப்படையினர் கிராமத்தைச் சுற்றிவளைத்து வெளியில் எவரும் செல்லவிடாமல் காவல் புரிந்தனர்.

ஒருபகுதி படையினர் கிராமத்திற்குள் வீடு வீடாகச் சென்று "கூட்டம் நடைபெறப் போகிறது எல்லோரும் பாடசாலைக்குச் செல்லுங்கள்" என்று அனைவரையும் கூட்டிச் சென்றனர்.

அதேவேளை இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் சங்கிலியில் பிணைக்கப்பட்டு ஒட்டுசுட்டான் முகாமிற்குக் கூட்டிச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டனர்.


## பிரயாண ஒழுங்குகள்

# VACANCIES IN SAUDI ARABIA

### CATEGORY

| | | |
|---|---|---|
| 1. | Work Controller | SR 1100+100 FA |
| 2. | Work Scheduler | SR 1100+100 FA |
| 3. | MATERIAL Controller | SR 800+100 FA |
| 4. | Hvac-Split Units/Central Technicians | SR 900+100 FA |
| 5. | Appliance Technician | SR 800+100 FA |
| 6. | T.V. Repairman | SR 700+100 FA |
| 7. | Carpenter/Locksmith | SR 600+100 FA |
| 8. | Plumber | SR 600+100 FA |
| 9. | Painter | SR 500+100 FA |
| 10. | Janitor/General Workers | SR 300 &100 FA |
| 11. | H.D.Duty Driver/Janitor Supervisor | SR 600& 100 FA |
| 12. | Mechanical Helper | SR 400& 100 FA |

## DUBAI

1. Farm Labourers 450& 100 Dubai Riyal
2. ஆணிகள் செய்யும் தொழிற்சாலை லேபர் 450& 100 Dubai Riyal
   வயதெல்லை 18க்கு மேல்

## KUWAIT

1. Cleaners [National Cleaning Company] 30 KD

**சிங்கப்பூர் House Maid உடன் தேவை**

சம்பளம்: 250 SD
வயதெல்லை: 20 — 30 வரை

**Passport, கலர்ப் படம் Passport Size படம் 6 தேவை.**

**முற்பணம் அறவிடப்பட மாட்டாது.**

பிரயாணம் செய்ய கடவுச்சீட்டுத் தந்தவர்கள் ஒழுங்குகள் அனைத்தும் செய்யப்பட்ட பின் பிரயாணம் செய்யத் தவறின் கடவுச்சீட்டு திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

காரியாலயங்கள் அனைத்தும் செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி மட்டும் திறக்கப்படும்

தலைமைக் காரியாலயம்:-

# கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

கிளை: 1.
**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
குப்பிளான் சந்தி, குப்பிளான்.

கிளை: 2.
**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**
வன்னிச்சி கோவிலடி, வல்வெட்டி.

(C 6106)


## 90 ஆம் நாள் நினைவஞ்சலி



**செல்வவிநாயகம் ஞானசேகரன்**
**(வீரவேங்கை கப்டன் ஹரேந்திரன்)**

அன்னையின் மடியில்:
**13- 12- 1967**
தமிழ் மண்ணிற்கு வித்தாகிய நாள்:
**13- 05- 1988**

அன்பின் உதிரத்தில் அழகாய்ப் பிறந்தவனே!
ஆசைக்குத் தலைமகனாய் ஆடி மகிழ்ந்தவனே!
இனத்தின் இடர் கண்டு இளவயதில்
இணைமறந்து
ஈடில்லா ஈழத்தினை மீட்கப் புறப்பட்டு
உறக்கமிலா உள்ளத்தில் உறுதியினை
அறுதியிட்டு
ஊற்றெடுக்கும் வீரத்தினை
உலகுக் கெல்லாம் காட்டி
ஐயமேதுமின்றி அடங்காத் தமிழனாய்
ஒற்றுமைக்கு வித்திட்டு ஒரு தாயின்
பிள்ளைகளாகி
ஓலமிடும் உன்னினத்தின் ஓயாத்
துயரத்திற்கு
ஔடதம்! தனித் தமிழர் ஆட்சி தான்!
(என்ற)
கட்டுக்குலையாத கட்டிளங்காளையே
காளைப்பருவத்துக் காதலை மறந்தவனே!
கிட்டிய கேள்வியை வெட்டித்
துறந்தவனே - விடுதலைக்
கீத கானத்தை கேட்கத் துடித்தவனே!
கொக்கரித்த எதிரிகளை கொடியிறக்கி
வைத்தவனே - அந்தோ
அவர்களை உன்னை வான் கோனாய்
ஆக்கினரோ??

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் வல்வையில் அவரில்லத்தில் 10- 08- 88 இல் நடைபெறும்.

அன்புள்ள பெற்றோர், சகோதரன், சகோதரி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(5626)

## மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி கமலாதேவி சுப்பிரமணியம்**
(ஆசிரியை றோமன் கத்தோலிக்க பாடசாலை கோப்பாய் தெற்கு)

**தோற்றம்:** 28-01-1956
**மறைவு:** 10-8-1985

அன்புடைய என் மனைவியே கமலாதேவி
ஆண்டின்று மூன்றிங்கு கடந்த போதும்
இன்பமுடன் நாம் வாழ்ந்த காலந் தன்னை
ஈதலினால் இனசனத்தார் புகழ்ந்த பேற்றை
உன்னுடைய நனிபேச்சை உயர்ந்த பண்பை
ஊர்மக்கள் உரைப்பதை
நாம் கேட்டுக் கேட்டு
என்றும் நீ எங்களுடன் இருப்பாய் போன்றே
ஏக்கமுடன் பார்க்கின்றோம்
இறையே சேர்வாய்!

கணவன், மகன்: மயூரன்,
சகோதரர், உறவினர்.

கிறிஸ்தவக் கல்லூரி முன்பு,
கோப்பாய்.

(5628)


## இன்று ஆரம்பம்

**பௌதிக வகுப்பு**
வியாபாரி மூலை, பருத்தித்துறை.

# 90 A/L

ஆரம்பம்: **10-8-88**
காலை 6.00 மணி
ஆசிரியர்: **வர்ணம்**

(C 6129)


## 2 ஆம் வருட நினைவு



பிறப்பு: 01 - 06 - 1925

இறப்பு: 11 - 08 - 1986

**ஞானப்பிரகாசம் பேனடிற்**
(முன்னைநாள் லிகிதர் யாழ் மத்திய கல்லூரி)

"உத்தானமும் உயிரும் நானே
என்னில் விசுவாசமாயிருக்கிறவன்
இறந்தாலும் பிழைப்பான்"
(அரு. 11: 25)

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 11 – 08 – 88 வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் திருப்பலியில் பங்கு கொண்டு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**உறவினர்.**

120/5A, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(5702)

## ஓராண்டு நினைவஞ்சலி



**குமரேசு கமலராஜன் [கிக்கி]**

**மலர்வு:** 16 - 4 - 1967
**உதிர்வு:** 23 - 7 - 1987

திதி: 10- 8- 1988

அன்பின் உறைவிடமே! [illegible] உன் [illegible]மே!! கன்னியூர் [illegible] மண்ணில் [illegible] உதிர்ந்தது உயிர் [illegible] மண்ணில் [illegible] காலம் எல்லாம் ஏனோ; பாருத் துயரில் [illegible] எம்மை தவிக்கவிட்டு மீளாத் துயில்கொண்டு காலனுடன் சென்றாயே.
நீ காலனுடன் சென்று ஓராண்டு வந்திடினும் உன் நினைவுகளை மறக்குமோ எம்முள்ளம் உன் இனிய ஆத்மா சாந்தி பெற எம் கண்ணீர் பூக்களை உன் முன் அர்ப்பணிக்கின்றோம்.

உன் பிரிவால் தவித்து ஏங்கும்:
அன்புத் தந்தை, தாய், சகோதரிகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

விளையாட்டரங்கு வீதி,
கல்வியங்காடு,
கோப்பாய்.

K. Pushpan
Ontario, Toranto,
Canada

(5701)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**
பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச் சொல்லா தார்.

**பொருள்:**
நல்ல அறிஞரின் அவையில் நற்பொருளைக் கேட்பவர் மனத்தில் பதியுமாறு சொல்ல முடியாதவர், பல நூல்களைக் கற்றாலும் பயன் இல்லாதவரே.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- [illegible] நாவலர் வீதி, தொலைபேசி 24805
22073
யாழ்ப்பாணம்.
10-08-1988 க. பெ. இல. 23


## சனநாயகம் எங்கே?

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் நாட்டில் மொத்தம் 2.073 பேர் "காணமற் பானவர்" பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இது சரியான புள்ளிவிவரக் கணக்கெடுப்பு மதிப்பீட்டின் பின்னர் உறுதிப்படுத்தப்பட்ட எண்ணிக்கையாக இருக்க முடியாது. கிடைத்த விவரங்களை வைத்து மேலெழுந்தவாரியாக கணக்கெடுக்கப்பட்ட எண்ணிக்கையாகவே இருக்கும். சரியான முறையில் விவரம் சேகரிக்கப்பட்டு, கணக்கெடுக்கப்படும் போது எண்ணிக்கை கூடுதலாகவே இருக்கச் செய்யும்.

வடக்கில் கடந்த 5 வருடங்களாகக் காணமற் போனவர்கள் மதிப்பீட்டை பூரணமாகச் செய்வதற்கு செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளையும் ஏற்பாடு செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும் மாதாந்தம் சராசரி 700 பேர் காணமற் போகிறார்கள் என்றால், நாட்டில் சட்டமும் ஒழுங்கும் எந்த அளவுக்குச் சீர்குலைந்து விட்டன என்பதை இலகுவில் காட்டிக் கொடுக்கும் அளவு மானியாக அது விளங்குகிறது எனலாம்.

காணமற் போகிறவர்கள் என்றதும் படைகளால் கைது செய்யப்பட்டு அதன் பின் என்ன நடந்தது என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படாமல், எங்கிருக்கிறார்கள். என்ன ஆனார்கள் என்பது பற்றிய விவரம் தெரியாமல் போனவர்கள் என்றே கருதத் தோன்றும். அந்தப் பிரிவைச் சேர்ந்தோரே அதிகம்

சனநாயக ரீதியாக நாடாளுமன்றம் இயற்றிய சட்டத்தை தமது கையில் எடுத்து வைத்துக் கொண்டு, துஷ்பிரயோகம் செய்யும் இராணுவ ஆட்சியிலேதான் காணமற் போகிறவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பது உண்டு.

ஆனால் இலங்கையில், சனநாயக ஆட்சி நடப்பதாகக் கூறப்பட்டாலும், வடக்கு கிழக்கில் — தமிழர் பிரதேசங்களில்— ஐந்து வருடங்களுக்கு முன்னரே யுத்த நிலை ஏற்பட்ட தன்மையும், இராணுவ ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டது போன்ற சூழ்நிலையும் உருவாகி விட்டது. அது தொடர்ந்தது; தொடருகிறது.

அதே நிலைமை இப்போது தென்னிலங்கையிலும் உருவெடுத்துள்ளது. அதனால் நாட்டில் காணமற் போவோர் எண்ணிக்கை அதிகரிப்பதில் வியப்பில்லை.

காரண காரியம் தெரிவிக்கப்படாமல் ஆட்களைக் கைது செய்வது அல்லது கடத்துவது என்ற நிலை தொடரும் வரை காணமற் போவோர் எண்ணிக்கையும் உயரவே செய்யும்.

இந்த நிலை தொடர்ந்தால் மக்கள் பாதுகாப்பும், வாழ்வும் என்னவது? காணமற் போவோர் பட்டியல் நீளுவதற்குத் தீவிரவாதிகளும் காரணமாக இருக்கலாம். ஆனால் அதற்கான பொறுப்பு அரசாங்கத்தையே சார வேண்டும்.

படையினரே தமக்கும், அரசாங்கத்துக்கும் எதிரானவர்களைக் காணமற் போகச் செய்தால், முன்னுதாரணம் காட்டினால், தீவிரவாதிகள் எப்படி இருப்பார்கள்?

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு எனக் கூறிக்கொண்டு, அவற்றை மீறும் வகையில் அரசும், அதன் அதிகாரிகளும் நடந்து கொண்டால் மக்களுக்குப், பாதுகாப்புக் கிடைப்பது எங்ஙனம்?

எவரும் எப்போதும் காணமற் போகலாம் என்ற நிலை தொடர்ந்தால், நீதி, சமூக உரிமை, தனிமனித உரிமை என்பன நிலைநாட்டப்படுவது எங்ஙனம்? சனநாயகம் பேணப்படுவது எப்படி?

இராணுவ தர்பாரும், சர்வாதிகாரப் போக்கும் தலையெடுத்தால் சனநாயகம் மறைக்கப்பட்டு விடும். மக்கள் மன எழுச்சி கொள்ளாவிட்டால் அந்நிலையைப் போக்குவது கடினம். இது ஒரு சாதாரண உண்மை.

# 8 ஆண்டு வளைகுடா போர் முடிவுக்கு வருகின்றது;
# ஆகஸ்ட் 20 முதல் யுத்த நிறுத்தம் அமுல்!

ஐ. நா, ஆக. 9

வளைகுடா யுத்த நிறுத்தம் இம்மாதம் 20 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்று ஐ. நா. பொதுச்செயலாளர் பெரெஸ் டி குயிலர் அறிவித்தார்.

ஐ. நாவின் பாதுகாப்புச் சபை, யுத்த நிறுத்தம் பற்றி பொதுச் செயலாளர் பெரஸ் டி குயிலர் நடத்திய பேச்சுக்கள் பற்றி நேற்று விரிவாக ஆராய்ந்தது.

அதன் பின்னரே பொதுச் செயலாளர் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வரும் திகதியை அறிவித்தார்.

யுத்த நிறுத்தம் சரியாகக் கடைப்பிடிக்கப் படுகிறதா என்பதைக் கண்காணிக்க 350 பேர் கொண்ட ஐ. நா அவதானிகள் குழு ஒன்று வளைகுடாவுக்கு அனுப்பி வைக்கப்படும். 26 நாடுகளைச் சேர்ந்த மேஜர் அந்தஸ்துக்கு மேற்பட்ட ஆயுதப்படை அதிகாரிகள் அவதானிப்புக்குழுவில் இடம்பெறுவர்.

கண்காணிப்புக்கு உதவ ஐ. நா. சிறிய கடற் படைப்பிரிவு, விமானப் படைப்பிரிவு ஒன்றையும் வளைகுடாவுக்கு அனுப்பி வைக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

### சிதம்பரம் எச்சரிக்கை

சீக்கியத் தீவிரவாதிகளுக்கு உதவுவதன்மூலம் பாகிஸ்தான் தற்கொலைப் பாதையில் செல்கிறது என்று இந்திய உள்துறை இணை அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

பிரதமர் காந்தி, உள்துறை அமைச்சர் பூட்டாசிங் ஆகியோரைக் கொல்ல சர்வதேச மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட சதிச்செயல் சம்பந்தமாக இந்திய நாடாளுமன்றத்தில் நடந்த விவாதத்தின்போது இணை அமைச்சர் சிதம்பரம் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

பாகிஸ்தான் மறு

இந்தியப் பிரதமர் மற்றும் தலைவர்களைக் கொல்லும் சதித்திட்டத்தில் தனக்கும் பங்கு இருப்பதாக வெளிவந்த தகவல்களை பாகிஸ்தான் அரசு வன்மையாக மறுத்துள்ளது.

இஸ்லாமபாத்தில் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

### திட்டம் நிராகரிப்பு

நிக்கரகுவா கொன்ராக் கிளர்ச்சியாளருக்கு இராணுவ உதவியை மீண்டும் அளிக்கும் அதிபர் றேகனின் திட்டத்தை அமெரிக்க காங்கிரஸில் உள்ள ஜனநாயக செனட்டர்கள் மீண்டும் நிராகரித்துவிட்டனர் என்று அறிவிக்கப்படுகின்றது. (எ)

### 13 ஆண்டுகளாக சண்டை நடக்கும்
## அங்கோலாவிலும் யுத்த நிறுத்தம்; நமீபியாவில் இருந்து படை வெளியேற்றம்
### தென் ஆபிரிக்கா திடீர் அறிவிப்பு

ஜெனிவா, ஆக 9

அங்கோலாவுடனான போரில் யுத்தநிறுத்தம் செய்யப்போவதாகவும் தென் மேற்கு ஆபிரிக்க நாடான நமீபியாவில் இருந்து தனது படைகளை விலக்கிக் கொள்ளப்போவதாகவும் தென் ஆபிரிக்க அரசு நேற்று அறிவித்தது.

நமீபியா அங்கோலா பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஜெனிவாப் பேச்சுக்களில் திடீர் திருப்பம் ஒன்று ஏற்பட்டதைத் தொடர்ந்து தென் ஆபிரிக்க அரசு இந்த அறிவிப்பை விடுத்தது.

அங்கோலாவுடனான 13 ஆண்டு கால போரில் யுத்த நிறுத்தத்தைஉடனடியாக கடைப்பிடிப்பதுஎன்றும் நமீபியாவில் இருந்துதனது படைகளைப் புதன்கிழமையில்இருந்து விலக்கிக் கொள்வது என்றும் தென் ஆபிரிக்க அரசின் அறிவிப்பு மேலும் தெரிவித்தது.

ஐ. நா ஸ்தாபனம் நமீபியா குறித்து மேற்கொண்ட தீர்மானம் சரியாக அமுலுக்குக் கொண்டுவரப்படும் வரை அடையாளமாக ஆயிரம் தென் ஆபிரிக்கத்துருப்புக்கள் நமீபியாவில் நிலைகொண்டிருக்கும் என்றும் தென் ஆபிரிக்க அரசு மேலும் தெரிவித்தது. (எ)

வெளி உலகில்

## ஏழுகட்சி அரசியல் குழுவில் கருணாநிதியும் ஒருவர்

புதுடில்லி, ஆக. 9

இந்திய எதிர்க்கட்சிகள் ஏழு ஒன்றுசேர்ந்து அமைத்துள்ள தேசிய முன்னணியின் அரசியல் குழுவில் பதினொரு பேர் இடம்பெற்றுள்ளனர்.

அவர்களில் ஒருவர் தி மு.க. தலைவர் மு. கருணாநிதி.

ஏனையவர்கள் விவரம் வருமாறு

1. திரு. என். ரி. ராமராவ் (தெலுங்கு தேசம் கட்சி)
2. திரு. வி பி சிங் (ஜன மோர்ச்சா)
3. திரு. அஜித்சிங் (லோக்தள்)
4. திரு. தேவிலால் (லோக்தள்)
5. திரு. பகுகுணா (லோக்தள்)
6. திரு பிரபுல்ல மஹந்த (அஸாம் கண பரிஷத்)
7. திரு. ராமகிருஷ்ண ஹெக்டே (ஜனதா)
8. திரு. பிஜூபட்நாயக் (காங்கிரஸ்-எஸ்)
9. திரு. ராம்தஹன் (காங்கிரஸ்-எஸ்)
10. திரு. எஸ். பி. சிங் (ஜனதா).

## சோவியத், ஆப்கன் கூட்டாக பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை

கெரில்லாக்களுக்குத் தொடர்ந்து உதவினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சோவியத் யூனியனும் ஆப்கனிஸ்தானும் கூட்டாக பாகிஸ்தானை எச்சரித்துள்ளன.

சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவார்ட்னெட்ஸே தனது நான்கு நாள் காபூல் பயணத்தின் முடிவில் ஆப்கன் அதிபருடன் சேர்ந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அதில்தான் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை கெரில்லாக்கள் காபூல் மீது மீண்டும் ரொக்கட் தாக்குதலை நடத்தினர் என்று அறிவிக்கப்பட்டது.

சோவியத் துருப்புக்கள் ஜெனிவா உடன்பாட்டில் கூறப்பட்டபடி அடுத்த ஆண்டு பெப்ரவரிக்குள் ஆப்கனில் இருந்து வெளியேறிவிடும் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

# பர்மாவில் மாணவர் கிளர்ச்சி;
## பொலீஸார் சுட்டதில் ஐவர் பலி!

ரங்கூன், ஆக 9

பர்மா முழுவதும் நேற்று இடம் பெற்ற மாணவர் ஆர்ப்பாட்டங்களில் குறைந்தது ஐந்து பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இராணுவச் சட்டத்தை எதிர்த்து இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன.

ரங்கூனில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. வெளிநாடுகளின் ராஜதந்திரிகள் பாதுகாப்பு இன்மை காரணமாக ரங்கூனை விட்டு தாய்லாந்து தலைநகரான பாங்கொக்குக்குச் சென்றனர்.

அண்மையில் பிறப்பிக்கப்பட்ட இராணுவச்சட்டம் தான் நிலைமையை மோசமாக்கியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

## பஸ் விபத்து: 40 பேர் பலி!

அரச பஸ் ஒன்று காஷ்மீர் மாநிலத்தில் நேற்று பள்ளத்தாக்கில் வீழ்ந்ததில் 40 பயணிகள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

அச்சமயத்தில் பஸ்ஸில் 50 பயணிகள் இருந்தனர். (எ)

# பின்தங்கிய கிராமங்களைப் பார்வையிட
# யுனிசெவ் குழு யாழ் வரும்

யாழ்ப்பாணம், ஆக. 10

யாழ் குடாநாட்டில் உள்ள பின்தங்கிய கிராமங்களைப் பார்வையிடுவதற்காக "யுனிசெப்" நிறுவன உயரதிகாரிகள் இந்தமாத பிற்பகுதியில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்கள்.

இத் தகவலை யாழ். செயலக உயர் அதிகாரி ஒருவர் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

யுனிசெப் நிறுவனம் யாழ் மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்கு உதவி செய்யவுள்ளது.

இதற்காக பின்தங்கிய கிராமங்கள் பற்றிய விவரக் கோவை ஒன்றை தயாரித்துத் தரும்படி கேட்டிருந்தது.

இதற்கு அமைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் தகவல்கள் திரட்டப் பட்டு வருகின்றன.

இத்தகவல்களின் அடிப்படையில் பின் தங்கிய கிராமங்களை பார்வையிட 'யுனிசெப்' நிறுவன உயர் அதிகாரிகள் குழு யாழ்ப்பாணம் வரவுள்ளது. (இ-5)

### சைக்கிள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஆக 10

யாழ் பஸ்நிலையப் பகுதியில் களவாடப்பட்ட மூன்று சைக்கிள்களை யாழ் நகர ஓட்டோ சாரதிகள் மீட்டனர்.

களவாடப்பட்ட சைக்கிள்களுடன் அவற்றைக் களவாடியதாகச் சந்தேகிக்கப்பட்ட வாய் பேசமுடியாத சிறுவன் ஒருவனும்பிடிபட்டான், எனினும் அச்சிறுவன் மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கப் பட்டான்.

மீட்கப்பட்ட சைக்கிள்களில் ஒன்று உரியவரிடம் ஒப்படைக்கப் பட்டது ஆனால் ஏனைய இரு சைக்கிள்கள் ஓட்டோ சாரதிகளின் பாதுகாப்பில் உள்ளன. உரியவர்கள் இந்தச் சைக்கிள்களை ஓட்டோ சாரதிகளுடன் தொடர்பு கொண்டு உரிய பற்றுச்சீட்டுகளைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. (க-9)

### போட்டி

சர்வோதயத்தின் ஆதரவில் இயங்கும் எட்டு பாலர் பாடசாலைகளுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை மைதானத்தில் இன்று புதன் நடைபெறும்.

இந்த போட்டிக்கு பிரதம விருந்தினராக சர்வோதய வட பிராந்திய வெளிக்கள இயக்குநர் திரு கி. சிவசுப்பிரமணியம் கலந்து கொள்வார். (க)

காணமற் போனவர்கள்:

## கடந்த ஆறு மாதங்களில் 2,073 பேர் இல்லை!

கொழும்பு ஆக 10

இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் நாட்டில் 2 ஆயிரத்து 73 பேர் காணமற் போய் விட்டனர் என்று தகவலறிந்த பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஜூன் மாதத்தில் மட்டும் 282 பேர் காணமற் போய்விட்டனர் என்று தெரிவிக்கப் பட்டது.

இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஆயிரத்து 466 பேர் காணமற் போய்விட்டனர்.

மார்ச் மாதத்தில் 345 பேரும் ஏப்ரல் மாதத்தில் 302 பேரும் காணமற் போய்விட்டனர் என்று முறையிடப்பட்டது. (அ-எ)

### கோக்குவிலில் கொள்ளை!

பட்டப்பகலில் சைக்கிளில் வந்த ஆயுதமேந்திய ஆறுபேர் வீடொன்றில் நகைகளையும், ரொக்கப் பணத்தினையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கொக்குவில் சாம்பியன் லேனில் உள்ள வர்த்தகர் ஒருவரின் வீட்டில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது

வீட்டிலிருந்த மூன்று வயது மகளைச் சுடப்போவதாகப் பயமுறுத்தி கழுத்திலும், காதிலும், கைகளிலும் இருந்த நகைகளும் - பாதுகாப்பாகப் பூட்டி வைத்திருந்த [illegible] பணமும் [illegible] கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-119)

### மடுவுக்கு யாத்திரிகர்

இவ்வருட ஆவணித் திருநாளை முன்னிட்டு மடுத்திருப்பதிக்கு குடாநாட்டில் இருந்தும் யாத்திரிகர்கள் பெருமளவில் செல்லத் தொடங்கி உள்ளனர்.

இம்மாதம் 1 ஆம் திகதி ஆரம்பமான படுக் [illegible] 15 ஆம் திகதி [illegible] கிழமை நிறைவுறும். (இ-51)

சமய சந்திதிகளில்

### முத்துமாரி அம்பாள் தேர்த்திருவிழா

மண்டைதீவு வேப்பம்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேர்த்திருவிழா கடந்த 28 ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது.

இந்த ஆலயத்துக்கென புதிதாக அமைக்கப்பட்ட தேரில் அம்பாள் வீதிவலம் வந்ததை ஆயிரக்கணக்கான பக்தர்கள் கண்டு தரிசித்தனர். (இ-167)

### மோட்ச சிரார்த்த சங்காபிஷேகம்

அண்மைக்காலங்களில் வன்செயல்களால் அகால மரணம் அடைந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும், நாட்டின் அமைதியை வேண்டியும், ஆடி அமாவாசையை முன்னிட்டும் மோட்ச சிரார்த்த சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

இச்சங்காபிஷேகம் நல்லூர் அருள் மிகு ஸ்ரீ சட்டநாதர் தேவஸ்தானத்தில் எதிர் வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். (இ-சி)

### வீரகத்தி விநாயகர் மகா கும்பாபிஷேகம்

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய சம்புரோக்ஷண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இதற்கு முன்னோடியாக 17ஆம் திகதி புதன் கிழமை, 18 ஆம் திகதி வியாழக்கிழமை கிரியா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. (இ-75)

### கப்பலேந்தி மாதா திருநாள்

வடமராட்சி கிழக்கில் பிரசித்தி பெற்ற கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலய திருநாள் கொண்டாட்டங்கள் கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின.

13ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிப் பூசையில் சிறுவர்களுக்கு முதல் நன்மை வழங்கப்படும்.

14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு செபமாலைப் பேரணி ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு சட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா திருச்சுரூபப் பேரணியுடன் இணைந்து மாலை5மணிக்கு ஆலயத்தை வந்தடையும்.

15 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 7 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து திருச்சுரூப ஆசீர் வாதத்துடன் கொண்டாட்டங்கள் நிறைவுபெறும்

### யாழ். மரியன்னை பேராலயத்தில் பெருவிழா

யாழ். மரியன்னை பேராலயப் பெருவிழாவும், மரியாயின் ஆண்டு நிறைவுவிழாவும் கடந்த 6 ஆம் திகதி சனிக்கிழமையில் இருந்து நடைபெற்றுவருகின்றன.

தினமும் காலையும் மாலையும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படுகின்றன. மாலை ஆராதனைகள் 4.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

15 ஆம் திகதி விண்ணேற்பு அடைந்த மரியன்னையின் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (இ-5)

மயிலிட்டிப் பகுதியில்

## ஆபாசப் படம் காட்டிய ஒருவர் தாக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஆக. 10

காங்கேசன்துறை மயிலிட்டிப் பகுதியில் நடமாடும் மினி சினிமா நடத்திய ஒருவர் ஆபாசப் படம் காட்டியதை அடுத்து இளைஞர் கோஷ்டி ஒன்றினால் நையப்புடைக்கப்பட்டார்.

அவரது தொலைக்காட்சிப்பெட்டி, டெக் என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டன.

படக்காட்சியை மெய்மறந்து ரசித்துக்கொண்டிருந்த ரசிகர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன என்று கூறப்படுகிறது.

இந்த தகவலை அடுத்து உதயன் செய்தியாளர் யாழ் மாவட்ட மினி சினிமா சங்கத்துடன் தொடர்பு கொண்டார்.

அப்போது பிரஸ்தாப சங்கத்தின் உப செயலாளரும், தணிக்கைக்குழு உறுப்பினருமாகிய திரு. மு செல்வநாயகம் இந்த செய்தியை ஊர்ஜிதம் செய்தார்.

இவ்வாறான ஒரு சம்பவம் நடந்து முடிந்த பின்னரே இது பற்றி எமக்கு தெரியவந்தது.

அதற்கு முன் எவரும் எமக்கு இதுபற்றி முறையிடவில்லை.

அத்துடன் நிலையான ஒரு இடத்தில் மினி சினிமா வைத்து நடத்துபவர்களுக்கே நாம் அனுமதிப்பத்திரம் வழங்கியுள்ளோம். இவ்வாறாக நடமாடும் மினி சினிமாக்காரர்களுக்கு அனுமதி எதுவும் வழங்கவில்லை.

இந்நிலையில் எம்மிடம் பதிவு செய்யாமலும் அனுமதிப் பத்திரம் பெறாமலும் மினி சினிமா நடத்திபது குற்றமாகும்.

இப்படி அவர் கூறினார் (இ-9)

## பருத்தித்துறையில் நாளை கோமாரி நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்படும்

யாழ்ப்பாணம், ஆக 10

பருத்தித்துறை கால்நடை வைத்தியக் கந்தோரில் நாளை வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 10 மணி வரை மாடுகளுக்குக் கோமாரி நோய் தடுப்பு மருந்து ஏற்றப்படும்.

டாக்டர் எம். தங்கராசா இதனைத் தெரிவித்தார்.

கால்நடை வளர்ப்போர் தவறாது தங்கள் மாடுகளுக்கு தடை மருந்து போடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று வடமராட்சியின் ஏனைய பகுதிகளுக்கும் பிரிவு, பிரிவாக தடுப்பு ஊசி ஏற்றுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
யான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று5/-
நகட்டிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

உதயன்

10 - 08 - 1988 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# முடிச்சு மாறிகள் குறித்துக் கவனம்!

யாழ்ப்பாணம் ஆக 10

பிரயாணிகள் போன்று நடித்து பஸ்களில் ஏறும் முடிச்சு மாறிகள் பிரயாணிகளின் பொதிகளை இடை வழிகளில் கையாடிச் சென்று விடுகின்றனர்.

இது விடயத்தில் பொதுமக்கள் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.

வட பிராந்திய மினி பஸ் சேவை சங்கங்களின் சமாஜத்தலைவர் திரு. பொன் மதிமுகராசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது:-

அநேகமாக தூர சேவை பஸ்களிலேயே இம் முடிச்சுமாறிகள் தம் கைவரிசையைக் காட்டி விடுகின்றனர்.

எனவே, தூர சேவைகளை மேற்கொள்ளும் பிரயாணிகள் இம் முடிச்சுமாறிகள் மீது அதிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இம்முடிச்சுமாறிகளின் செயலால் மினிபஸ் ஊழியர்கள் கெட்டபெயர் கேட்க வேண்டியுள்ளது.

எனவே, பஸ் ஊழியர்கள் பிரயாணிகளின் பொதிகளுக்கு பொறுப்பேற்க வேண்டாமென அவர்களுக்குபணிப்புரை வழங்கியுள்ளேன் என்று தெரிவித்தார். (க)

# புதிய பீடாதிபதி

யாழ் பல்கலைக்கழக மருத்துவத்துறையின் பீடாதிபதியாக பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நடந்த மருத்துவ பீடசபைக் கூட்டத்தில் இத்தெரிவு இடம் பெற்றது.

இதுவரை காலமும் மருத்துவத்துறையின் பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் எல். சிவஞானசுந்தரம் (நந்தி) புலமைப் பரிசில் பெற்று வெளிநாடு சென்றதால் தமது பதவியை ராஜினாமா செய்திருந்தார்.

இதனால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்காக தேர்தல் மூலம் பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (க-5)

# டாக்டரின் முயற்சி

யாழ்ப்பாணம், ஆக 10

பிரெஞ்சு டாக்டரின் கருணை உள்ளத்தாலும், முயற்சியாலும் சிறுவன் ஒருவன் உயிர் பிழைக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளான்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:—

மன்னார் ஆஸ்பத்திரியில் ஏற்பு வலியால் அவதிப்பட்ட எஸ் ரஜீதின் (வயது 11) என்னும் சிறுவனை பிரெஞ்சு டாக்டர் ஒருவர் ஹெலிகொப்டர் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவந்தார்.

நேற்றுக்காலை 8மணி அளவில் ஹெலிகொப்டரில் பலாலி வந்த நோயாளியான சிறுவனை யாழ். ஆஸ்பத்திரி அம்புலன்ஸ் வண்டி யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்து சேர்த்தது.

சிறுவன் தற்போது ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகிறான். (க-10)

# சீல் வைக்கப்பட்ட கடைகள் திறக்கப்பட்டன

வவுனியா, ஆக. 10

வவுனியாவில் சீல் வைத்து மூடப்பட்ட கடைகள், திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்று வருகிறது.

மேற்படி கடைகள் மூடப்பட்டபோது கைது செய்யப்பட்ட வர்த்தகர்கள், ஊழியர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே கடைகள் திறக்கப்பட்டன.

தீவிரவாத இயக்கம் ஒன்றிற்கு உதவி செய்தனர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

இனிமேல் எந்தவொரு தீவிரவாத இயக்கத்திற்கும் உதவுவதில்லை என்று வர்த்தகர்களிடமிருந்து உறுதிமொழி பெற்ற பின்னரே கைதானவர்கள் விடுதலைசெய்யப்பட்டார்கள்.

இதேவேளையில், சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் சனியிரவு இடம்பெற்ற தேடுதலின் போது ஒருவர் கொல்லப்பட்டதாகவும், படையினர் சடலத்தை எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-164)

# வடமராட்சி ஊரடங்கு நேரமாற்றம்

வடமராட்சி, ஆக. 10

வடமராட்சிப் பகுதியில் ஊரடங்கு அமுல்படுத்தப்படும் நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தினமும் இரவு 7 மணிக்கு அமுல் செய்யப்பட்டுவந்த ஊரடங்கு கடந்த திங்கட்கிழமை முதல் இரவு 9 மணிக்கே அமுல்படுத்தப்படுகிறது.

ஆனாலும் வழமை போல காலை 5 மணிக்கே ஊரடங்கு தளர்த்தப்படுகிறது. (க-160-70)

# அமைதிப்படையின் ஹெலி மீது சூடு!

கொழும்பு, ஆக 10

வவுனியாவில் நேற்று முன்தினம் இந்திய அமைதிப்படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்றை நோக்கி தமீழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் சுட்டனர்.

இப்படி இந்தியத் தூதரக வட்டாரங்களை ஆதாரங்காட்டி இலங்கை வானொலி நேற்று இரவு அறிவித்தது.

ஹெலிக்கொப்டருக்குச் சேதம் ஏற்படவில்லை என தூதரக வட்டாரங்கள் தெரிவித்ததாக அச் செய்தி மேலும் தெரிவித்தது. (அ-எ)

# தவறிய பணம்

முக்கிய கடனை அடைப்பதற்காக நேற்று 9-8-88 செவ்வாய்க்கிழமை வர்த்தக வங்கியில் எடுத்த பணம் (11,500/-) ஐ வங்கியில் தவறவிட்டுவிட்டேன். தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் வர்த்தக வங்கி முகாமையாளரிடம் அல்லது கீழ் விலாசத்திற்கு ஒப்படைக்குமாறு பணிவாக வேண்டுகிறேன்.

அ. செல்லத்துரை
''இரத்தினபவனம்''
வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டை.
(5649)

★ எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) பிரபு சரண்யா
செந்தாமரை ஜனகராஜ்
''மனசுக்குள் மத்தாப்பு''

(2) காந்தாராவின்
''பாட்டி சொன்ன கதை''

(3) மோகன் அமலா
சின்னிஜெயந்த்
கலந்து கொள்ளும்
"இசை நகைச்சுவை நிகழ்ச்சி"
[ லண்டன் நிகழ்ச்சி ]

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C 6140)

## பூஸா..,

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகிறது.

கடந்தமாத இறுதியில் விடுவிக்கப்பட்டோர் விவரம் வருமாறு:

1. சுந்தரம் மகாநந்தன் (ஊரெழு), 2. நாகராசா வெள்ளையன், 3. தம்பு தங்கவேல் (திருமலை), 4. செல்லையா கந்தசாமி (திருமலை), 5. செல்வராசா வடிவேல் (திருமலை), 6 தம்பையா சாம்பசிவம் (சுன்னாம்), 7. கந்தசாமி முருகேசு (அளவெட்டி), 8. ஜெகநாதன் சிறீராஜ் (பருத்தித்துறை), 9. பெருமாள் இராசலிங்கம் (கிளிநொச்சி), 10. செல்லையா சற்குணராசா (வட்டுக்கட்சி). (அ)

## வவுனியா- ---

யதைத் தொடர்ந்து வவுனியாவில் கிழமையில் 3 தினங்களும், மன்னாரில் திங்கள், வெள்ளி ஆகிய இரு தினங்களும் மட்டுமே செயற்பட அனுமதித்திருந்தனர்.

மன்னாரிலும் இந்தியப் படையினர் வங்கிகள் இயங்கினால், வாரத்தில் 5 நாட்கள் இயங்க வேண்டும். இல்லையேல் பூட்ட வேண்டும் என உத்தரவிட்டுள்ளனர் என நம்பிக்கையாக அறியவந்தது. (அ-164)

## இலங்கை இராணுவம்..

(1ம் பக்கத்தொடர்ச்சி)

வும் கலந்து கொண்டார்.

சச்சேரிக்குள் இலங்கை இராணுவத்தினராலும், பொலீஸாராலும் போதிய பாதுகாப்பு வழங்கப்படுமென்றும் ஊழியர்களை வேலைக்குத் திரும்புமாறும் இணைப்பதிகாரி கேட்டுக் கொண்டார்.

கோட்டைக்குள் இருக்கும் அகதிகளை எக் காரணம் கொண்டும் அகற்ற முடியாது என்றும், அவர்களை நிரந்தரமாக மீளக் குடியமர்த்தி அவர்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் பூர்த்தியான பின்னரே நிரந்தரமாக அகற்றப்படுவார்கள் என்றும், அதற்குப் போதிய காலம் எடுக்கும் என்றும் அரசாங்க அதிபர் தூதுக் குழுவினரிடம் எடுத்துக் கூறினார்.

இந்திய அமைதிப் படையின் பொலீஸ் பிரிவினரையும் கோட்டைக்குள் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தலாம் என்றும் அவர்கள் கூறினர்.

தூதுக் குழுவினர் பல விடயங்களை விபரமாக அங்குவிளக்கியபின்புஇப்போது கூறப்பட்ட விடயங்களை ஏனைய ஊழியருக்கும் எடுத்து விளக்கி முடிவை அறிவிப்பதாகக் கூறித் திரும்பினர். (அ-150)

## யுத்த....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதாக ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் அறிவித்தார்.

பக்தாத் வீதிகளில் மக்கள் ஆடிப்பாடி மகிழ்ந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இதனிடையில் வளைகுடாவில் உள்ள பிரிட்டிஷ் தளம் ஒன்றுக்கு பிரதமர் மார்க்கரட் தாட்சர் நேற்று திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரது விஜயம் பற்றி தகவல்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன.

வளைகுடா யுத்த நிறுத்த அறிவிப்பை முதலில் வரவேற்ற நாடு சீனா என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ)

## வடக்கு கிழக்கு, ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் போராளிகள் அழிவதன் மூலம் தமிழினத்திற்கே பாரிய இழப்பு ஏற்படுகின்றது.

இந்த நிலையை மாற்றியமைக்கவேண்டியதுவிடுதலைப் புலிகளின் கடமையாகும்.

தற்போதைய நிலையை மாற்றியமைப்பதற்குப் புலிகள் யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து ஜனநாயக வழியில் தேர்தலைச் சந்தித்து வடக்கு கிழக்குப் பகுதிகளை தமிழ் மக்களே நிர்வகிக்கும் நிலையை உருவாக்க வேண்டும்.

இவ்வாறான தமிழ் நிர்வாகம் நடைமுறைப் படுத்தப்படும் காலப் பகுதியில் அந்த நிர்வாகத்திற்கு எதிராக எந்த சக்தி செயற்பட்டாலும் அதனை முறியடிக்கும் பணியில் எமது பங்களிப்பைச் செய்யத் தயங்க மாட்டோம்.

இதனை மனதில் கொண்டு இந்தியாவுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்தி வடகிழக்குப் பிரதேசத்தை சமாதானப் பிரதேசமாக்க விடுதலைப்புலிகள் முன்வர வேண்டும் — இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. (அ-164)

## றேகன்,..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரவான கோஷங்கள் ஊர்வலத்தில் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டக்காரர் வாசகங்கள் அடங்கிய அட்டைகளைப் பிடித்து இருந்தனர்.

வாஷிங்டன் நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் சென்றது.

ஊர்வலம் அமெரிக்க ஜனாதிபதி மாளிகையை அடைந்ததும் அங்கு அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

முன்னதாக இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்த அமைப்பாளர்கள் செய்தியாளர்களிடம் பேசும் போது, இலங்கையில் கூட்டாட்சி அமைப்பை ஏற்படுத்துவதற்கு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை ஜெயவர்த்தனா அரசு பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். (அ-4)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னையா காந்தியம்மாள்

வல்வெட்டி, வேவில் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி சின்னையா காந்தியம்மாள் 9-8-88 அன்று காலமானார். இவர் திரு. சின்னையா (சிங்கப்பூர் பென்சனியர்)வின் அன்பு மனைவியும், சிவபாக்கியம், சகாதேவன் (அபுதாபி), சரஸ்வதியம்மா, மகாதேவன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், திரு. நல்லையா (ஓய்வுபெற்ற எழுது வினைஞர்), வீ. இராசா (புகையிரத நிலைய அதிபர்), இராஜேஸ்வரி, திருமலர் ஆகியோரின் அன்பு மாமியும், தவராஜா (Ceylon Trading Company), செல்வராஜா (பிரான்ஸ்), சித்திரா, கௌரி, வசந்தா, விஜியா, இராஜதேவன், பிறேமதேவன், கிச்சி, சுஜி, சுவீற்றி, சங்கர், குலன், பாலேந்திரன் (அமெரிக்கா), இரவீந்திரன் (சுவீட்சர்லாந்து), மகேஸ்வரி, வதனேஸ்வரி, தேவகுமார், அஞ்சலா, புஸ்பமலர் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் நேற்று (9-8-88) எள்ளல்குள மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சின்னையா.

(5647)

## பொ. இராசேஸ்வரன் D. I. G.

### பிரதிப் பொலிஸ் மா அதிபர்

தெல்லிப்பளை கருகம்பானையைச் சேர்ந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. பொன்னம்பலம் இராசேஸ்வரன் 07-08-88 அன்று தொல்புரத்தில் அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி திரு பூ. பொன்னம்பலம், திருமதி விஜயலக்சுமி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும். திரு. திருமதி கனகசுந்தரம் ஆகியோரின் மருமகனும், திருமதி திலகஞானம் அவர்களின் அன்புக் கணவரும், நோர்வேயில் கல்வி பயிலும் தேவராஜன், தர்மராஜன், கேசவராணி (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி), சொரூபராணி ஆகியோரின் அருமைத் தந்தையும், ராஜேஸ்வரி (அவுஸ்திரேலியா). பரமேஸ்வரி, மகேஸ்வரி, புவனேஸ்வரி, திரு இராஜேந்திரன் (தாய்லாந்து), திரு. அருளம்பலம் (Bar at Law- லண்டன்), திரு இளையதம்பி (B. C. C-) கொழும்பு), கமலாதேவி, கமலாம்பிகை, நகுலேஸ்வரி (லண்டன்), திரு. நகுலேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற திரு. குணரத்தினம், திருவாளர்கள் சச்சிதானந்தம், பாலகிருஷ்ணன், சுப்பிரமணியசுவாமி, திருமதிகள் இரத்தினாம்பிகை, சாரூபகுமாரி, நாகேஸ்வரி, திரு. தேவதாசன், திரு சகாதேவன், திரு. சாந்திக்குமார், திருமதி ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 11-8-88 வியாழக்கிழமை காலை 11-00 மணிக்கு அன்னாரின் தொல்புரம் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பொன்னாலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள்.

(5708)

PROFESSIONAL COMPUTER STUDIES

COURSE SCHEDULE

| COURSE TYPE | DAYS | DURATION | COMMENCING | PRACTICAL HOURS |
|---|---|---|---|---|
| B. C. S. | SAT & SUN | 7 MONTHS | 17/08/88 | OPTIONAL 40 HOURS ON I. B. M PC |
| dBASE III PLUS | MON & FRI | 12 WEEKS | 17/08/88 | 50 HOURS ON I. B. M PC |
| WORD PROCESSING WORD STAR 2000 | MON & FRI TUS & THU SAT & SUN | 40 HOURS | 17/08/88 | 40 HOURS ON I. B. M PC |
| G/W BASIC | WEEK DAYS | 16 WEEKS | 17/08/88 | 50 HOURS ON I. B. M PC |
| PASCAL | WEEK DAYS | 16 WEEKS | 17/08/88 | 50 HOURS ON I. B. M PC |

Course Fees payable in instalments; 5% discount on full payment.

B. C. S. (British Computer Society) London Exam Part I is equvalant to Higher National Diploma (H.N.D.)

dBASE is a very special course for Accounts Personals, Managers and even for Beginners. At the end of the course you will be able to develope your own software using the 4th generation language (dBASE III plus)

Word Processing is a Professional Course for all Secretaries

To Register B. C. S. Examination for APRIL 1989 the application should be sent before AUGUST 17th of this month, so please contact us before 15th.

For further details contact :
R. Karthigesan, C/o Dr. K. Ramasamy
"Dwarakai", Thirunelvely East, Jaffna.
We are the authorized dealers and distributors for:
DATASERVE COMPUTER LTD.
COLOMBO - 10.
(5707)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 10-08-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Wednesday 10th August 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org